Registered as a NewsPaper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    மாசி 13    (25-02-1992)    செவ்வாய்க்கிழமை    ஓசை: 07

## க. பொ. த. (உ/த) பரீட்சை ஏப்ரலில் நடாத்த ஒழுங்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெறாதிருக்கும் க. பொ. த உயர்தரப்பரீட்சை எதிர்வரும் ஏப்பிரல் மாதத்தில் நடத்தப்படும் என்று பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவேண்டிய க. பொ. த. உயர்தரப்பரீட்சையே இம்முறை ஏப்பிரல்மாத பாடசாலை விடுமுறையின்போது நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல கூறியுள்ளார்.

# தலைவர் பேட்டி வழங்கவில்லை

# பத்திரிகை செய்திக்கு புலிகள் மறுப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் 'ஐலன்ட்' பத்திரிகை நிருபர் திரு. பிராங்லின் ரவிராஜுக்கு விசேட பேட்டி வழங்கியதாக வெளிவந்த செய்திகளை விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் மறுத்துள்ளது.

'ஐலன்ட்' பத்திரிகை நிருபர் திரு. பிராங்லின் ரவிராஜ்ஜை எமது இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் சந்திக்கவும் இல்லை பேட்டி வழங்கவும் இல்லை எனப் புலிகள் இயக்கம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.



ஐலன்ட் ஞாயிறு இதழில் (23- 2- 92) திரு. ரவிராஜ் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துப்பேசியதாக குறிப்பிட்டுள்ளமை உண்மைக்குப் புறம்பானதும் விஷமத்தனமானதும் என புலிகளின் தலைமையகம் அறிவித்துள்ளது.

## வவுனியா கிராமங்கள்மீது பரவலாக எறிகணை வீச்சு

(வவுனியா)

மன்னார், வன்னிப்பிரதேசங்களில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டத்தைத் தொடர்ந்து பொது மக்கள் குடியிருப்புகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினரால் துப்பாக்கி பிரயோகமும் எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. வவுனியா கிராமப் பகுதிகளில் மேலும் படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

புதுவிளாங்குளம். விளக்குவைத்த குளம் பகுதியில் சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான உலங்குவானூர்திகள் நேற்று கடும் 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளதடைமுகாமில் 4 தமிழ்ப் பெண்கள் கைது

(வவுனியா)

தாண்டிக்குளம் சோதனை முகாமில் வைத்து நான்கு தமிழ்ப் பெண்கள் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மட்டக்களப்பிலிருந்து வந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் அவ்விடத்தில் வைத்து இராணுவத்தினரால் மிகமோசமாக துன்புறுத்தப்பட்டு முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதுவரை அவர்கள் விடுதலை செய்யப் படவில்லை.

## புலிகள் மீது நடவடிக்கை ஜெயலலிதா வற்புறுத்து

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுக் காலையில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசிய போது அவர் இந்த யோசனையைத் தெரிவித்ததாக சரத்பவார் தெரிவித்தார்.

சிங்கப்பூருக்குச் செல்லும் வழியில் விமானநிலையத்தில் செய்தியாளரிடம் பேசிய சரத்பவார் பிரபாகரனும், பொட்டம்மானும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதால் அந்த இயக்கத்தைத் தடை செய்யும் நோக்கம் உண்டா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், முதலமைச்சர்செல்வி ஜெயலலிதா இது தொடர்பாகச் சில யோசனைகளைத் தெரிவித்திருப்பதாகவும் இவற்றைத் தான்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் மூன்று தொழிற்சங்கங்கள் எழுச்சி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

உணவு முத்திரையில் புள்ளிகள் வெட்டி எடுக்கப்பட்டு அதற்குரிய உணவுப் பொருட்கள் வழங்கப்படாமையைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது.

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம், சுன்னாகம் வர்த்தக ஊழியர் சங்கம், ஆனைக்கோட்டை தச்சுத் தொழிலாளர் சங்கம் ஆகியவை இணைந்து நடாத்திய இந்த ஊர்வலததில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். கொக்குவிலில் இருந்து ஆரம்பமாகிய இந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அரசிற்கு பேரிடி

# 320 ஆயுதப்படையினர் பலி; 175 நவீன ஆயுதங்கள் பறிப்பு


[யாழ்ப்பாணம்]

கடந்த இரண்டு மாத குறுகிய கால இடைவெளியில் சுமார் 320 இற்கும் மேற்பட்ட சிறிலங்காப் பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டிருக்கின்றனர்: இதே காலப் பகுதியில் இவர்களிடமிருந்து பெருந்தொகையான நவீனரக ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்ற இத் தாக்குதலகள் அனைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)





கடந்த 10 ஆம் திகதி முல்லைத்தீவு இராணுவமுகாம் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கான திட்டத்தை வன்னி மாவட்ட விசேட தளபதி தீபன் விளக்குவதையும், வன்னி மாவட்டத்தளபதி கெங்கா அருகில் நிற்பதை முதலாவது படத்திலும், வெற்றிகரமாக நடத்தப்பட்ட தாக்குதலின் பின் கைப்பற்றப்பட்ட 50 கலிபர் உட்பட ஒரு தொகுதி ஆயுதங்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## கடவுச்சீட்டு அனுப்புதல் விரைவில் தடை வரும்

(கொழும்பு)

கடவுச்சீட்டுக்கள், மற்றும் அவசர சான்றிதழ்கள் பெறுவது தொடர்பாக சிறிலங்கா அரசு புதிய சட்டத்திருத்தங்களை அறிமுகப்படுத்தவுள்ளது. இதன்படி வெளிநாட்டிலுள்ள இலங்கையர் ஒருவர் குடிவரவு குடியிருப்பு கட்டுப்பாட்டாளரின் அனுமதியின்றி தபால் மூலமோ, பிறர் மூலமோ கடவுச்சீட்டை அல்லது அவசரசான்றிதழை அனுப்புவது தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப்படவுள்ளது. அதேபோல் இலங்கையில் இருக்கும் ஒருவரும் தமது கடவுச்சீட்டு அல்லது அவசர சான்றிதழ் வெளிநாடுகளுக்கு அனுப்புவதும் தடை செய்யப்படும். மேலும் ஒன்றிற்கு மேற்பட்ட கடவுச்சீட்டு அல்லது அவசர சான்றிதழ் பெறுவதும் கடும் தண்டனைக்கு உரிய குற்றமெனவும் அறிவிக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## மக்களின் தேவை குறித்து அரசஅதிபரிடம் மகஜர்

(முள்ளியவளை)

முல்லைத்தீவுப்பிரதேசத்தில் தரமான வைத்திய சாலை இல்லை. நோயாளர் தங்குமிட வசதி இல்லை. முதலுதவிக்கும் வசதிகள் இல்லை. பிரசவம் போன்ற அவசர தேவைகளுக்கு கூட வாகன வசதி இல்லை. மருந்தகத்தில் போதிய மருந்துகள் இல்லை. என்று முல்லைத்தீவு பிரதேச மக்கள் அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அண்மையில் முள்ளியவளைப் பகுதியில் நடைபெற்ற நடமாடும் கச்சேரி சேவையின் போது அரசாங்க அதிபரைச் சந்தித்த இப்பிரதேச மக்கள் மேலும், குடும்பங்களுக்கான நஷ்டஈட்டுத்தொகை பதினையாயிரம் ரூபா இதுவரை வழங்கப்படாமையினையும், விவசாயத்திற்கு உரிய பசளை மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதையும், நெல் சந்தைப்படுத்தும் வாய்ப்பு இல்லை என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளனர். அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் அடிப்படை வசதிகள் பல இல்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாண மாநகரசபை வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1992

1992 ஆம்ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்குரிய இறுதித் திகதி 15. 03 92 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்
24.02.1992.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி 3937)

### வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

அன்னபேதி - புகையிலை பதப்படுத்துவோருக்குரியது. ஒரு கிலோ ரூபா 75/- க்குமேல் (புகையிலை கிருமாற்று) திருமதி க. சத்தியவதனி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (2231)

## நிர்வாக சபை கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். ஐக்கிய நாணய சங்க சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்க சமாசத்தின் யாழ். பிராந்திய சபையின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 3.30 மணிக்கு யாழ். குருநகர் சென் றோக்ஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் பிராந்திய சபைத் தலைவர் திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெறும் எனப் பிராந்திய சபைச் செயலாளர் செல்வி ஆர், எம். ஜே. இராஜ்குமாரி தெரிவித்துள்ளார். (24)

## "அசைன்மன்ட் இன் ஜப்னா"

(சென்னை)

இலங்கையில் இந்தியப் படையின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சந்தேஷ் பாண்டே எழுதிய அசைன்மன்ட் இன் ஜப்னா Assignment in Jaffna Published in 1992) என்றதொரு நூல் அண்மையில் வெளிவந்துள்ளது.

## நடன நாடக நிகழ்ச்சிகள்

திருமறைக் கலாமன்ற கவின்கலைகள் பயிலகம் வழங்கும் நடன நாடக நிகழ்ச்சிகள் நாளை மாலை 6:45 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெற உள்ளன. இந்நிகழ்ச்சிகளில் பயிலகத்தில் பயின்ற மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்இடம் பெறும்.

## வெளிநாட்டுக் கடனில் ஏயர்பஸ் கொள்வனவு

(கொழும்பு)

ஏயர் லங்கா விமானப் போக்குவரத்து நிறுவனம் பிரான்ஸ் நிறுவனம் ஒன்றிலிருந்து ஆறு ஏயர் பஸ்கள் வாங்க வெளிநாட்டிலிருந்து கடனாகப் பணம் பெறத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஏயர் பஸ் என்ற சிறு பயணிகள் விமானம் கொள்வனவு தொடர்பாக நம்பிக்கையில்லாத்தீர்மானம்ஒன்றை பிரேமதாசா அரசுக்கு எதிராக கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நினைவு கூருகின்றோம்

**1992-02-25**

1986ஆம் ஆண்டு கொக்கட்டிச் சோலையில் பாம்பு கடித்ததால் எமைப் பிரிந்த -

**துமிலன்** [சின்னத்தம்பி விஜயகுமார் - அரசினர்பண்ணை, கரடியனாறு, மட்டக்களப்பு]

1987ஆம் ஆண்டு வவுனியா மன்னார் வீதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய -

**கந்தையா / செல்வம்** [கிருஷ்ணபிள்ளை வரதராஜா - தண்டுவான், நெடுங்கேணி]

1989 ஆம் ஆண்டு வவுனியா / கோயில்குளம், கல்வீரன் குளம், ஆதிகுளம், சிதம்பரபுரம், சவயமலை ஆகிய பகுதிகளில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட 4 இளைஞர்கள்

1991ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்காப்படையினரின் எல்லைக்குள் தவறுதலாகச் சென்ற போது அவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**மேஜர் செங்கதிர்** [நடேசு ரஞ்சித வரதராசா - நெல்லியடி]

**சிந்து** [ரகுநாதன் சரவணபவன் - சங்குவேலி, உடுவில்]

ஏறாவூரில் முஸ்லிம் ஊர்காவல் படையினரின் காவலரண் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**லெப். விகடன்** [யோகராசா - ஏறாவூர் - 05 மட்டக்களப்பு

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/3955)


# முதலாவது ஆண்டு நிறைவு நாள்

# 1991.02.25 - 1992.02.25

எமது ஸ்தாபனம் ஆரம்பித்து ஓராண்டு நிறைவு நாள் இன்றாகும்.

எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி எம்மை உயர்வடையச் செய்த வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் யாவருக்கும் இத்தினத்தன்று எமது இதயபூர்வமான உவகையை தெரியப்படுத்துவதில் நிறைவடைகின்றோம்.

இனிவரும் ஆண்டுகளிலும் எமது சேவைக்கு உரிய விதத்தில் ஆதரவு நல்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.





## உங்களுக்குத் தேவையான

- கண்ணாடி வகைகள்
- கோல்ட் பிறேம்
- அலுமினிய இணைப்புக்கள்
- கோல்ட் டேப் பிறேம்
- தெய்வ உருவப்படங்கள்

என்பனவற்றை நியாயமான விலையில் பெற நாடுங்கள்

# படமாடம்

இல. 95 அர்ச்சுனா வீதி, - யாழ்ப்பாணம்.

(சி-3958)

# காஷ்மீருக்கு தூதுக்குழு அனுப்புமாறு ஐ. நா விடம் பாகிஸ்தான் கோரிக்கை

[இஸ்லாமாபாத்]

இந்திய அரசாங்கத்தினால் ஆளப்பட்டுவரும் காஷ்மீர் பகுதிக்கு உண்மைகளை நேரில் கண்டறிவதற்கு தூதுக்குழுவொன்றை அனுப்பிவைத்து அங்கு இடம் பெறுவதாகச் சொல்லப்படும் மனித உரிமை மீறல்களை விசாரிக்குமாறு பாகிஸ்தான் ஐக்கிய நாடுகள் செயலாளர்நாயகத்தைக் கேட்டுக் கொண்டது என்று பாகிஸ்தான் வெளி விவகாரங்களுக்கான ராஜாங்க அமைச்சர் சித்தீக்கஞ்ஜூ தெரிவித்துள்ளார்.

செயலாளருக்குஎழுதியுள்ள கடிதமொன்றிலேயே சித்தீக் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காஷ்மீர் பகுதியில்இந்தியாஅத்துமீறி நடந்து கொள்வதாகக் கூறப்படும் சம்பவங்கள்பற்றிவிசாரிக்கதூதுக் குழு ஒன்றை அங்கு அனுப்பி வைக்குமாறும்,

காஷ்மீர் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதை நிறுத்துமாறு இந்தியாவைக் கேட்டுக் கொள்ளுமாறும் பாகிஸ்தான் ஐ. நாவைக்கேட்டுள்ளது.

# ரஷ்ய அணு ஆயுதங்களை அழிக்க அமெரிக்கா உதவும்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் அணு ஆயுதங்களை அழிக்க உதவத்தயாராக இருப்பதாகவும், அணு ஆயுத இரகசியங்களை விற்காமலிருக்க ரஷ்ய உயர் விஞ்ஞானிகளுக்கு இரண்டு கோடியே ஐம்பது லட்சம் டொலர்உதவி வழங்குவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ரஷ்யத் தலைவர் பொரிஸ் யெல்சினுக்கும் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜேம்ஸ் பேகருக்குமிடையில் நடைபெற்ற மூன்று மணிநேர சந்திப்பில் இந்த உடன்பாடு காணப்பட்டதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் அணுசக்தி விஞ்ஞானிகள் இருப்பதாலும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் வீழ்ச்சி ஏற்படுவதாலும் லிபியா, ஈரான் போன்ற நாடுகள் அவர்களை பயன்படுத்திக்கொள்ளக் கூடும் என மேற்குநாடுகள் அஞ்சுகின்றன.

இந்த விஞ்ஞானிகளின் திறமையை இராணுவ நோக்கத்திலிருந்து சமாதான நோக்கத்திற்குப் பயன் படுத்த அமெரிக்கா உதவும் எனவும் பேக்கர் தெரிவித்தார்.

# லெனின்இல்லாது ரூபிள் வரும்

(மாஸ்கோ)

ரூபிள் நோட்டுகளிலிருந்து லெனின் இலட்சினை அகற்றப்படவுள்ளது.

10, 25, 50, 100 பெறுமதியான ரூபிள் நோட்டுகளில் பொறிக்கப்பட்டிருக்கும் லெனின் இலட்சனை நீக்கப்பட்டு அதற்குப பதிலாகப் புதிய வடிவமைப்பில் உள்ள ரூபிள் நோட்டுக்கள் வெளிவரவுள்ளன.

# ஆர்ப்பாட்டத்தால் நிறுத்த முடியாது

ரஷ்யாவின் பொருளாதார சீர்திருத்தங்களை கம்யூனிச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களினால் தடுத்து நிறுத்த முடியாது என்று அந் நாட்டின் பிரதிப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கான கம்யூனிசதீவிரவாதிகள் கிரெம்ளின் மாளிகையை நோக்கி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியுள்ளனர். ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சினை தேசத்துரோகி என வர்ணித்தபடி முன்னேறிய ஆர்ப்பாட்டக்காரர்களை தடுத்து நிறுத்த பொலிசார் பெரும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது.

# இரண்டு மாதங்களில் முப்படைகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களின் விபரம்

## ( 24 - 12 - 1991 — 23 - 02 - 1992 )

| திகதி | இடம் | உயிரிழப்பு | மொத்தமாக கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் (24-12-1991 — 20-2-1992) | |
|---|---|---|---|---|
| 24-12-91 | கொக்குத் தொடுவாய் (இராணுவம்) | 25 | ★ 50 கலிபர் (றைபோட்டுடன்) | 01 |
| 26-12-91 | வவுனியா நொச்சிமோட்டை (இராணுவம்) | 01 | ★ ஜி. பி. எம். ஜி. | 01 |
| 29-12-91 | திருமலை சல்லி முந்தலில் இராணுவம் | 03 | ★ ஏ. கே. எல். எம், ஜி | 14 |
| 29-12-91 | யாழ் கடல் நீரேரியில் (இராணுவம்) | 09 | ★ மினி மினி எல். எம். ஜி | 02 |
| 3-1-92 | படுவான்கரை (இராணுவம்) | 02 | ★ பி. கே. எல். எம். ஜி | 01 |
| .. | படுவான்கரை (சமூகவிரோதிகள்) | 03 | ★ ரி-81 எல். எம். ஜி | 01 |
| 3-1-92 | மணலாறு காட்டுப்பகுதி (ஊர்காவற்படை) | 02 | ★ ரி-69 ஆர். பி. ஜி | 04 |
| 7-1-92 | வவுனியா ஒலுப்புளம் (இராணுவம்) | 03 | ★ ரி-56 - 2 ரக துப்பாக்கி | 39 |
| 9-1-92 | அம்பாறை மாவட்டம் (இராணுவம்) | 09 | ★ ரி-56 - 1 ரக துப்பாக்கி | 58 |
| 9-1-92 | களுவாஞ்சிக்குடி (மூக விரோதிகள்) | 01 | ★ ரி-56 ரக துப்பாக்கி | 37 |
| 10-1-92 | காரைநகர் பொன்னாலை (கடற்படை) | 10 | ★ ரி- 81 ரக துப்பாக்கி | 32 |
| 13-1-92 | திருமலை புளியங்குளம் (இராணுவம்) | 10 | ★ ரி-56 புதிய ரகதுப்பாக்கி | 03 |
| 16-1-92 | மன்னார் மாதிரிக்கிராமம் (இராணுவம்) | 10 | ★ 303 ரக துப்பாக்கி | 02 |
| 16-1-92 | அம்பாறை கஞ்சி குடிச்சாறு (விசேட அதிரடிப்படை) | 01 | ★ ஜி3 ஏ3 ரக துப்பாக்கி | 08 |
| 18-1-92 | கொக்கட்டிச்சோலை (சமூக விரோதிகள் | 01 | ★ சிக்னல் பிஸ்ரல் | 01 |
| 19-1-92 | வளலாய் (இராணுவம்) | 05 | ★ எவ். என். சி | 01 |
| 21-1-92 | திருக்கோணமலை சம்பூர் (இராணுவம்) | 01 | ★ வேட்டைத்துப்பாக்கி | 01 |
| 21-1-92 | திருமலை சீனன் குடா விமான தளக் குண்டுவெடிப்பு (விமானப்படை) | 40 | ★ ஜே. ஆர். கைக்குண்டு | 85 |
| 21-1-92 | திருமலை குச்சவெளி (இராணுவம்) | 20 | ★ ஆர். பி. ஜி எறிகணை | 13 |
| 22-1-92 | வவுனியா கணேசபுரம் (இராணுவம்) | 10 | ★ 60 எம். எம். மோட்டார் ஷெல் | 28 |
| 22-1-92 | வவுனியா மாமடு (இராணுவம்) | 04 | ★ ரி-81 ரக துப்பாக்கி எறிகணை | 02 |
| 26-1-93 | அம்பாறை (விமானப்படை) | 30 | ★ 50 கலிபர் ரவை | 1028 |
| 29-1-92 | சிங்கபுர (இராணுவம்) | 18 | ★ நடுத்தர ரவைகள் | 29,760 |
| 29-1-92 | தந்திரிமலை (இராணுவம்) | 03 | ★ ஜி 3 ரவைகள் | 90 |
| 1-2-92 | மன்னார் வங்காலை (இராணுவம்) | 07 | ★ பி. கே ரவைகள் | 3.415 |
| 2-2-92 | தச்சன்காடு (இராணுவம்) | 02 | ★ எவ். என். சி மகசீன் | 01 |
| 3-2-92 | யாழ்.குடாக் கடல் (கடற்படை) | 04 | ★ எவ். என். சி. கிரனைட் | 03 |
| 5,14-2-92 | வவுனியா (இராணுவம்) | 06 | ★ நேற்ரோ ரவைகள் | 942 |
| 7,8-2-92 | கரடியனாறு (இராணுவம்) | 18 | ★ 303 ரக ரவைகள் | 75 |
| 10-2-92 | முல்லைத்தீவு (இராணுவம்) | 25 | ★ வெளி இணைப்பு இயந்திரம் | 01 |
| 14-2-92 | மட்டக்களப்பு (இராணுவம்) | 16 | ★ தொலைத் தொடர்பு சாதனம் | 07 |
| 19-2-92 | மான்தீவு (இராணுவம்) | 07 | ★ திசை காட்டி | 02 |
| 20-2-92 | கருவேப்பங்குளம் (விமானப்படை) | 23 | ★ தொலை காட்டி | 04 |
| | | | ★ இரவுத் தொலை காட்டி | 01 |
| | மொத்தம்: | 320 | | |

# இஸ்லா. பொதுச்சந்தையில் முன்சோவியத் குடியரசுகள்

(தெகிரான்)

முன்னாள் சோவியத் யூனியனின் ஐந்து முஸ்லிம் குடியரசுகள், சக்திமிக்க இஸ்லாமிய பொதுச்சந்தையொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் ஈரான், துருக்கி, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இணைந்துள்ளன.

தெகிரானில் இரண்டு தினங்களாக நடைபெற்ற பொருளாதார கூட்டுறவு அமைப்பின் உச்சி மாநாட்டின் போதே இந்த இணைப்பிற்கான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

முன்னாள் சோவியத் குடியரசுகளான அஸர் பைஜான், உஸ்பெகிஸ் தான், டோர்க்மெனிஸ்தான், கிரிகிஸ்தான், தாஜிகிஸ்தான் என்றன புதிய அங்கத்துவ நாடுகள்தா இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

# உக்ரைன் அணு ஆயுதங்கள் அழிப்பதற்கு அனு.பட்டன

(கீவ்)

உக்ரைன் பகுதியிலிருந்த அணு ஆயுதங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவைமுடிவில் அழிக்கப்படுவதற்காக ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டன என்றும், எஞ்சியிருப்பவையும் ஜூலை மாதமளவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் உக்ரைன் அரசு அறிவித்துள்ளது.

வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பான நேட்டோவின் தலைமைச் செயலாளர் திரு. மான்பேர்ட் வேர்ணர் சோவியத் உறுப்பு நாடுகளில் மேற்கொண்டுள்ள தமது முதலாம் கட்ட சுற்றுப் பயணத்தின் போது உக்ரைன் தலைநகர் கீவ்விற்கு சென்றபோது உக்ரைன் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

உக்ரைன் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் மனநிறைவு தரும் விதத்தில் அமைந்திருந்தன என்று கூறிய அவர், ஆயுதங்கள் பரவிப் பெருகுவதை தடைசெய்வதைப் பற்றியும் பேச்சுக்கள் நடத்தியதாகத் தெரிவித்தார்.

# அமெரிக்காவில் குடியேறிய ஆசியரின் எடை அதிகரிப்பு

(சிக்காக்கோ)

அமெரிக்காவில் குடியேறும் ஆசிய அகதிகளின் பிள்ளைகள் உயரமாக வளர்வதுடன் எடை கூடியும் இருப்பதாக ஆய்வு ஒன்று கூறுகிறது.

அமெரிக்கா வரும் போது அளவில் சிறிதாகவும் மெலிந்தும் காணப்படும் பிள்ளைகள் ஊட்டச்சத்துள்ள உணவு காரணமாக உயரத்திலும், எடையிலும் கூடிவருவதாகவும் அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளின் குறைந்த வருமானம் பெறும் அகதிகளின் பிள்ளைகள் பற்றி அது குறிப்பிடுகையில், புதிதாகப் பிறக்கும் பிள்ளைகளின் எடையும் கூடியிருப்பதாகத் தெரிவித்துள்ளது. பத்து வருடங்களில் அவர்களின் வளர்ச்சியும் எடையும் துரிதமாக அதிகரிக்கிறது

25,000 ஆசியக் குழந்தைகளை ஆசியா அல்லாத இருபத்தியொரு லட்சம் குழந்தைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் வகையில் இந்த ஆராய்ச்சி இடம் பெற்றது.

# பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு

(டில்லி)

நரசிம்மராவ் அரசின் பொருளாதாரக் கொள்கை, அரசுத் துறையிலான முதலீடுகளை நிறுத்தச் செய்வது. போபர்ஸ் பீரங்கி பேரம் தொடர்பான புலன் விசாரணை முதலியவற்றோடு மேலும் சில விடயங்களுக்குமாக நேற்று ஆரம்பமான இந்திய பாராளுமன்றத்தின் கூட்டத் தொடரை எதிர்க்கட்சிகள், புறக்கணிப்பு செய்துள்ளன.

தேசிய முன்னணி, மற்றும் இடது சாரிக் கட்சிகளின் கூட்டணிகள் தாமும்இந்தப் புறக்கணிப்பை செய்யப் போவதாக அறிவித்துள்ளன.

மத்திய அரசின் நேற்று ஆரம்பமான கூட்டத் தொடரில் இன்று ரயில்வே பட்ஜட்டும், எதிர்வரும் சனியன்று பொது பட்ஜட்டும் தாக்கலாகவுள்ளன.

# "ஐ. நா. வை நம்ப முடியாது இந்தியாவிற்கு அணுகுண்டு அவசியம்"

"கி.பி. 2000-த்தில் இந்தியாவின் பார்வையில் உலகம் அணு ஆயுதத்தை துறந்திருக்காது. ஐ. நா, சபையிலும் இந்தியாவற்குச்சாதகமான பலம் இருக்காது. எனவே. இந்தியா குறைந்த பட்ச அணு ஆயுதம் தயாரித்துக் கொண்டு, இந்த வட்டாரத்தின் நடுத்தரசக்தியாகத் தன்னை வைத்துக் கொள்வதே அதன் நலனுக்கு ஏற்றது."

இவ்வாறு ஓய்வு பெற்ற இந்திய முப்படைத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜி அண்மையில் சர்வதேசஅமைதிக்கானகார்னஜி பவுண்டேசன் நடத்திய கருத்தரங்கில் "அடுத்த பத்தாண்டுகளில் இந்தியாவின் ராணுவ பலம்-வட்டாரச்செல்வாக்கு" என்ற தலைப்பில் வாசித்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக் கட்டுரையின் முழு விபரமும் வருமாறு;

"மாறியிருக்கும் (பழைய) சோவியத் யூனியனில் ரஷ்யா ஒரு பெரிய வல்லரசாக உருவாக வாய்ப்புண்டு. அணு ஆயுத பலம், இராணுவபலம் நிறைந்த நாடாகரஷ்யாஇருக்கும். என்றாலும், பழைய அமெரிக்க- சோவியத்யூனியன் எதிரெதிர் துருவமாக இருந்தது போல் ரஷ்யாஇருக்கமுடியாது.

அமெரிக்கா இராணுவ ரீதியில் பலமாகஇருக்கும். ஆனால் அதன் பொருளாதாரம் அவ்வளவு பலமாக இல்லை. ஜப்பானும் ஜேர்மனியும்அதில்போட்டியிடக் கூடியவை

எனவே புதிய உலகச் சூழ்நிலையில் இந்தியாவின்பழைய அணிசேராத் தத்துவம் எடுபடாது.

ஐக்கிய நாடுகள் சபையை வலிமைப்படுத்தும் முயற்சிகள் நடக்கும். ஆனாலும் ஐ. நா. சபையால் அடுத்த பத்தாண்டுகளில் திறமையாக உலகஅமைதியை நிலை நாட்டமுடியுமா என்பது சந்தேகம்தான். அதில் உறுப்பினர்களிடையே (நடைமுறையில்) சம அந்தஸ்து இல்லாததே காரணம்.

உலகத்தில் பொருளாதாரத் துறையிலும், தொழில் நுட்பத்திலும் இரு பிரிவுகளாக பிரிந்து கிடக்கும் வடபகுதி நாடுகளுக்கும் தென்பகுதிநாடுகளுக்கும் இடையே இந்தத் துறைகளில் சரியான பரிமாற்றம் வருமாஎன்பதும் சந்தேகம் தான். பணக்கார வடபகுதி நாடுகள் கொடாக் கண்டனாகவே இருப்பார்கள் விடாக் கண்டனாகத் தென்பகுதிஏழை நாடுகள் செயல்பட அவை ஆயுத பலமற்றவையாகஇருந்தால் முடியாது

ஆயுதங்களைப் பொறுத்த மட்டில் அடுத்த பத்தாண்டுகளில் இரசாயன ஆயுதங்கள், உயிரியல் ஆயுதங்கள் வேண்டுமானால் ஒழிக்கப்படும் என்று நம்பலாம்ஆனால், அணுஆயுத நீக்கம் கி.பி. 2000க்தில் நடக்காது. அதிகரிப்பு செய்யாமல் வேண்டுமானால் இருக்க வல்லரசுகள் ஒப்புக்கொள்ளலாம்.

போதைமருந்து கடத்தலும் பயங்கர வாதமும் கூட்டுச் சேர்ந்து விட்ட நிலையில், இரண்டுமே எதிர்காலத்தில் இன்னும் தழைக்கும் இந்தச் சூழ் நிலையில் சமூக-அரசியல், பொருளாதாரக் குறைகளை ஜனநாயக வழியில் தீர்க்க முயற்சித்தால் பயன் இராது!

இன்னும்சொன்னால் வெளிநாடுகள் ஊக்குவிக்கக்கூடிய ஆயுதக்கிளர்ச்சிகள் தொடரும்

அடுத்த இருபதாண்டுகளில் தெற்காசிய வட்டார அமைப்பின் (சார்க்) மூலம் ஒரு பெரிய கூட்டமைப்பைஉருவாக்கலாம் என்று இந்தியா நம்பக்கூடும். இது நிறைவேற வேண்டுமானால், பாகிஸ்தானுக்கு கௌரவமான அந்தஸ்து கூட்டமைப்பில்தரப்படவேண்டும். சிறு நாடுகள் மீது இந்தியா ஆதிக்கம் செலுத்த இது இன்னொரு உத்தி என்று அவை நினைக்கும் நிலை இருக்கக் கூடாது.

இதன் அடிப்படையில் சிந்தித்தால் கீழ் கண்ட முடிவுகளுக்கு இந்திய ஆட்சியாளர்கள் வரக்கூடும்.

சீனத்துக்கும் பாகிஸ்தானுக்கும் எதிராக அவை அணு ஆயுதத்தைப் பயன்படுத்தாமல் தடுக்கப்போதுமான அணு ஆயுதத்தை இந்தியா தயாரித்துக் கொள்ள வேண்டும். ஏற்கெனவே அப்படித் தயாரித்து வைத்திருந்தால், அதை இனி பகிரங்கமாகவே தக்க தருணத்தில் அறிவித்தும் விடலாம்.

அணுகுண்டு வைத்திருந்தால் தான் பெரிய வல்லரசுகள் இந்தியாவைத் தங்கள் இஷ்டத்துக்கு வளைக்கப் பார்ப்பதைத் தடுக்கலாம். உலகில் மற்ற எல்லா நாடுகளும் அணு ஆயுதங்களைக் கைவிடும் போது இந்தியாவும் கைவிடலாம். மற்றப்படி தன் நலனைப் பாதுகாக்க ஐ. நா. சபையை நம்பி இந்தியா சும்மாயிருக்க முடியாது.

> இந்தியாவின் முப்படைத் தளபதியாக இருந்து ஓய்வுபெற்ற ஜெனரல் கிருஷ்ணசாமி சுந்தர்ஜி அண்மையில் சர்வதேச அமைதிக்கான கார்னிஜி பவுண்டேசன் நடத்திய கருத்தரங்கில் "அடுத்த பத்தாண்டுகளில் இந்தியாவின்ராணுவபலம் வட்டாரச் செல்வாக்கு'' என்ற தலைப்பில் வாசித்த கட்டுரை இது.

அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கு வருவோம்.

இந்தியாவின் எல்லா உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கும் இரண்டு அடிப்படைக்காரணங்கள்தான்.

சமஷ்டி அமைப்பு என்ற பெயரளவில் உள்ள ஆட்சி முறையில் ஏகப்பட்ட அதிகாரங்களை மத்தியில் ஆரோக்கியமற்ற விதத்தில் குவித்து வைத்திருப்பது ஒரு காரணமாகும்.

மிகவும் குறைவான விகிதத்தில் வளர்ச்சி விகிதம் இருப்பதால் ஏற்படும் அதிருப்திகள் கடுமையான பிராந்திய உணர்வுகளுக்கு வித்திடுவது இரண்டாவது காரணம்.

இந்தியாவில் உள்ள பெரிய கட்சிகளில் அனேகமாக எல்லாமே அதிகாரத்தைப் பரவலாக்குவதை ஏற்கின்றன. பாரதீய ஜனதா. விதவிதமான ஜனதா தளங்கள், மாநிலக் கட்சிகள், இடதுசாரிக்கட்சிகள் முதலியவை இதில் அதிக ஆர்வம் காட்டுகின்றன. காங்கிரஸுக்கு மட்டும் பலமான மத்திய அரசில் எப்போதுமே ஒரு ஈடுபாடு. அது கூட வாயளவிலாவது அதிகாரப்பரவல் பற்றிப்பேச வேண்டியிருப்பது- இந்த விஷயத்தில் நாட்டில் நிலவும் மனநிலையின் விளைவுதான்.

இந்த அம்சத்தில் விரைவாக மாற்றம் ஏற்படாவிட்டால் நாட்டில் சிக்கல்தான் வளரும்.

உணவுக்கான பணத்தை ஒதுக்கிய பிறகுதான் இராணுவச் செலவுக்கு ஒதுக்கலாம் என்பதுதான் நியதி. ஆனால் இராணுவத்துக்கு இப்போது தரும் செலவுப் பணம் முழுவதையுமே வளர்ச்சிப்பணிக்கு ஒதுக்கினாலும், தற்போதைய லஞ்ச - ஊழல் முறையிலோ, பொருளாதாரப் பார்வையிலோ மாற்றம் இல்லாவிட்டால் பணம் வீணாகத்தான் போகும். அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளைத் தளர்த்தினாலே லஞ்ச வாய்ப்புகள் குறைந்து விடும்.

என்கருத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகளைத் தவிர, வேறு யாரும் அணு ஆயுதத் தயாரிப்பை எதிர்க்கப் போவதில்லை. ஒரு கட்சிகூடப் பகிரங்கமாக அதையும் எதிர்க்காது அணு ஆயுதப் பெருக்கத்தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை ஆதரிக்கவும் செய்யாது. அப்படிச் செய்தால் அது அரசியல் தற்கொலைதான்.

வட்டார ஆதிக்கத்தைப் பொறுத்த மட்டில் எந்தக் கட்சியும் ஆழமாகச் சிந்திக்கவில்லை என்றே கருதுகிறேன்.

1987இல் இலங்கைப்பிரச்சினையில் ஈடுபட இ. காங்கிரஸ் ஆட்சி முடிவு செய்ததை எதிர்க்கட்சிகள் சிந்திக்காமல் தாக்கின. ஆட்சி மாறியதும் முன்னாள் எதிர்க்கட்சிகள் வேறு விதமாக அதே பிரச்சினையை அணுகின

முக்கியமான தேசிய நலனுக்காக இராணுவத்தை பயன்படுத்துவதை ஏற்றுக் கொள்ளும் இந்தக் கட்சிகள், இந்தியாவை வலிமையான பெரிய நாடாகக் காட்டிக் கொள்ள மட்டும் விரும்புவதில்லை.

## விஜயவீரா குடும்பத்தினர் இராணுவ பாதுகாப்பில்

(கொழும்பு)

படையினரால் கொலை செய்யப்பட்ட ஜே. வி. பி, இயக்கத்தின் முன்னாள் தலைவர் றோகண விஜயவீராவின் குடும்பத்தினர் விரைவில் இராணுவ முகாம் ஒன்றுக்கு மாற்றப்படவுள்ளனர்.

இராணுவப் பாதுகாப்புக் காவலில் தற்போது வைக்கப்பட்டுள்ள றோகண விஜயவீராவின் மனைவியும், பிள்ளைகளும் கடுமையான பாதுகாப்புக் கூடிய இராணுவமுகாமொன்றிற்கு விரைவில் மாற்றப்படவுள்ளனர் என்று இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## இராணுவ ரீதியான தீர்வில் நம்பிக்கையில்லை

**- பிரேமதாசா**

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வு காண்பதில் நம்பிக்கை இல்லையென சிறிலங்காஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியுள்ளார். நேற்று முன் தினம் மாலை களனி கங்கைக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள ஜப்பானியநட்புறவுபாலத்தை திறந்து வைத்த பின்னர் இடம் பெற்ற நிகழ்ச்சியில் பேசிய பிரேமதாசா மேலும் கூறுகையில் கலந்துரையாடல் கருத்தொருமிப்பு, புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் தீர்வு காண்பதிலேயே நம்பிக்கை கொண்டிருப்பதாகக்குறிப்பிட்டார்.

## தமிழகத்தில் கெடுபிடிகள் தாங்க முடியவில்லை

**- மன்னார் வந்த தமிழர் ஒருவர்**

(மன்னார்)

கெடுபிடிகள் தாங்க முடியாமையினாலேயே தாயகம் திரும்பினோம்என்று மன்னார் வந்துள்ள தமிழ் அகதிகள் கூறியுள்ளனர்.

கடந்த சனியன்று தமிழகத்தின் இராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து ரமானுஜம் கப்பல் மூலம் தலைமன்னார் வந்துள்ள முதற்தொகுதிகளில் சிலர் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது,

தமிழகத்தின் மண்டபம் முகாமில் தங்கியிருந்த நாம் முகாமை விட்டு வெளியேறுவதற்கே அனுமதிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட அடிமைகள் போல நாம் நடத்தப்பட்டோம் என்றும், தாங்க முடியாத கெடுபிடிகளாலேயே தாயகம் திரும்பினோம் என்றும் தெரிவித்தனர்.

## ஸ்தாபகர் தின விழா

நல்லூர் திரிசாரணர் குழுவும், யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி சாரணர் குழுவும் இணைந்து ஸ்தாபகர் தி விழாவை கொண்டாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விழா நாளை புதன் கிழமை 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேலாயுதம் கலந்து கொள்கிறார் எனவும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.


யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பிரதேச மன்றங்களின்

**பொதுக் கூட்டங்கள்**

மேற்படி பொதுக் கூட்டங்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணைப் படி நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

| பிரதேச மன்றம் | காலம் | இடம் |
|---|---|---|
| சங்கானை | 07.03 92 சனிக்கிழமை முற்பகல் 10.00மணி | வழக்கம்பரை அம்மன் கோவிலடி' சுழிபுரம். |
| சாவகச்சேரி | 08.03.92 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30மணி | கமநலசேவைகள் நிலையம். கண்டிவீதி, மீசாலை வடக்கு |
| யாழ்ப்பாணம் | 14 03 92 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி | சங்க மண்டபம், கலாசாலைவீதி, திருநெல்வேலி கிழக்கு. |
| உடுவில் | 14.03 92 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணி | சங்கமண்டபம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு |
| நல்லூர் | 18.03.92 புதன்கிழமை முற்பகல் 10.00மணி | சங்கமண்டபம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு. |
| கோப்பாய் | 18.03.92 புதன்கிழமை முற்பகல் 11.00 மணி | சங்கமண்டபம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு. |

நிகழ்ச்சி நிரல்

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. பிரதேச மன்றக் குழு உறுப்பினர்கள் ஒன்பது பேரைத் தெரிவு செய்தல்
4. நன்றியுரை

தலைவர்

(சி-3956)

## சிந்தனைக்கு

அநீதி, பொய்ச்சான்று, துரோகம் ஆகியவற்றின் அடிப்படையில், ஒரு நிலையான ஆட்சி ஆதிக்கத்தை எழுப்ப முடியாது.

- டெமாஸ் தெனிஸ்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 25-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 05

# அமைச்சர் அபுசாலியின் ஆக்கிரமிப்புத் திட்டம்

''வடமாகாணம், வடமேல்மாகாணம் வடமத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய நான்கு மாகாணங்களின் எல்லைகள் மீள நிர்ணயிக்கப்பட வேண்டும். அதுவே சிங்கள தமிழ், முஸ்லிம் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு என நான் கருதுகிறேன்'' எனப் பெருந்தோட்டச் சேவைகள் அமைச்சர் எம். எல். எம். அபுசாலி பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்,

தனது இத்திட்டம் பற்றி விளக்கிய அமைச்சர் அபுசாலி, அம்பாறை மட்டக்களப்பு ஒரு மாகாணமாக அமையலாம் என்றும், பொலநறுவையும் திருக்கோணமலையும் இன்னொருமாகாணமாக அமையலாம் என்றும், மன்னார் மாவட்டம் வடமேல்மாகாணத்துடன் சேர்க்கப்படலாம் எனவும் அனுராதபுரமும், வெலியோயாவும் சேர்ந்து இன்னொரு மாகாணமாக அமையலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

விவசாயக் குடியேற்றங்கள் என்ற ரீதியில் கிராமம் கிராமமாகத் தொடங்கிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இன்று மாவட்டம் மாவட்டமாக ஆக்கிரமிக்கும் திட்டமாக அமைச்சர் அபுசாலியின் மூளையில் முளைவிட்டுள்ளது. இது தமிழர் தாயகத்தை எப்படியாவது ஆக்கிரமித்தே ஆகவேண்டும் என்ற சிறிலங்கா பேரினவாதிகளின் சிந்தனையாகும்.

விவசாயக் குடியேற்றங்கள் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்கள் கிழக்கிலும் வடக்கிலும் உருவாக்கப்பட்டபோது அவை ஆரம்பத்தில் ஒரு சில கிராமங்களாக மட்டுமே தெரிந்தன. ஆனால் அதன் பெருக்கம் கிராமங்கள் ஒன்று கூடி சிங்கள உதவி அரச அதிபர் பிரிவுகளாகவும், பின்னர் அவை தேர்தல் தொகுதிகளாகவும் வளர்ந்தன. தற்பொழுது மாவட்டங்களே சிங்கள மாவட்டங்களாக கபளீகரம் செய்யப்பட்டுவிட்டன. தற்பொழுது கிராமங்களாக இருந்த ஆக்கிரமிப்பு அலகுகள், மாவட்டத்திற்கும் அப்பால் மாகாணங்களாக மாறியுள்ளன.

அமைச்சர், அபுசாலியின் யோசனை இதன் வெளிப்பாடாக அமைந்ததே. அமைச்சரின் யோசனையின்படி பார்த்தால் வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் மட்டுமே தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும். ஆனால், அமைச்சர் தனது திட்டத்தில் வவுனியாவை ஏன் அநுராதபுரத்துடன் இணைக்காது விட்டார் என்பது ஆச்சரியமாக உள்ளது. சிலவேளை மறந்திருப்பாரோ? அல்லது வவுனியா சிங்களவர் மாவட்டம் என்ற எண்ணத்தில் பிறகு முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைத்து விடலாம் என எண்ணியிருப்பாரோ?

தமிழர் தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்து ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி அடைந்தமைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று குடியேற்றங்கள் என்ற போர்வையில் நிகழ்ந்த ஆக்கிரமிப்பேயாகும். ஆனால், ஆயுதப் போராட்டத்தால், ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகியும், பொருளாதாரம் அதல பாதாளத்திற்குச் சென்ற பின்னரும் கூட பேரினவாத சக்திகள் தமது ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கைவிடுவதாக இல்லை. பௌத்தபிக்குவில் இருந்து அரசியல்வாதிகள், அதிகாரிகள் வரை எவ்வகையிலும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்தே தீருவது எனக் கங்கணம் கட்டியவாறு உள்ளனர். இந்நிலையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதான வழி மூலமான தீர்வு சாத்தியப்பாடுடையதா என்பது சந்தேகமே.

# சிட்னியில் தமிழ்ப்பண்பாட்டு மாநாடு அக்டோபரில் நடத்த ஏற்பாடு

(சிட்னி)

அகில உலக தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் ஐந்தாவது மாநாட்டை அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னியில் வரும் அக்டோபர் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவுஸ்திரேலியாவிலுள்ள மாநாட்டு காரியாலயம் அறிவித்துள்ளது.

இந்த இயக்கத்தின் முதலாவது மாநாடு 1977 -ம் ஆண்டு சென்னையிலும், இரண்டாவது மாநாடு மொறீசியசிலும், மூன்றாவது மாநாடு சேலத்திலும், நான்காவது மாநாடு 1987 ஆம் ஆண்டு கோலாலம்பூரிலும் நடைபெற்றது.

இந்த மாநாட்டை சிட்னியில் உள்ள ஒருங்கிணைப்புக் குழுவுடன் இணைந்து மலேசிய உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகமும் அதன் நியூசிலாந்து கிளையும் ஏனைய அவுஸ்திரேலியா மாநிலங்களிலும், பசுபிக் நாடுகளிலும் இயங்கும் தமிழ் அமைப்புகள் ஒழுங்கு செய்துள்ளன.

இம் மாநாட்டின் கருப்பொருள் முன்னைய மாநாடுகள் போல் தமிழ்மொழி, இலக்கிய ஆய்வுடன் மட்டும் நிற்காது.

தமிழ் மக்கள் சிறப்பாக தாயகம் கடந்து வாழும் மக்களின் வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் கருத்திற் கொண்டன. பல்வேறு இன மக்கள் வாழும் அவுஸ்திரேலியா நாடுகளில் இன்று தமிழ் சமூகமொன்று வளர்ந்து வருகின்றது. இப் பின்னணியில் தமிழரின் மொழியையும், பண்பாட்டினையும் எவ்வகையில் பேணி வளர்க்கலாம் என்பதை சிட்னி மாநாடு கவனத்திற் கொள்ளலாம்.

இத்துடன் ஆய்வரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், கண்காட்சி, கலை நிகழ்ச்சி என்பனவும் இடம்பெறவுள்ளன.

ஆய்வுக் கட்டுரைகளும் ஏனைய ஆக்கங்களும் மாநாட்டு நூல் வடிவில் வெளியிடப்படும். ஆராய்ச்சிக் கட்டுரைகள் களப்பொருளுக்கிணங்க யூலை மாதத்திற்கு முன்பே சமர்ப்பிக்க வேண்டும்.

மாநாட்டில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும். பேராளரும் பங்குபற்றுவோரும் பதிவுக் கட்டணமாக பத்து அவுஸ்திரேலியா டொலர் செலுத்த வேண்டும்.

வதிவிட உணவு வசதி தேவைப்படின் நூறு அவுஸ்திரேலிய டொலர் செலுத்த வேண்டும். பிரயாணச் செலவு கொடுக்கப்படமாட்டாது. பங்குபற்ற விரும்புவோர் மாநாட்டு காரியாலயம் ஐ. சி டி. சி. 92, த. பெ. இல எண் 60. கோம்பூஸ் சௌவுத் என். எஸ். டபிள்யூ. 2140. அவுஸ்திரேலியா என்ற முகவரிக்கு பதிவுப் படிவங்களை கட்டணத்துடன் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## தொலைபேசி துண்டிப்பு

(கொழும்பு)

ஐ.தே.கட்சிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலியினதும், காமினி திசாநாயக்காவினதும் தொலைபேசிகள் தொடர்ந்தும் துண்டிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்களது வீடுகளிலுள்ள தொலைபேசி இலக்கங்களான 573579,500600 எண்களோடு தொடர்பு கொள்ள முயல்பவர் இத்தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டுவிட்டன என்ற பதிவுநாடாச் செய்தியை மட்டுமே கேட்க முடிகிறது.

## நடன, நாடக நிகழ்ச்சிகள்

(குருநகர்)

யாழ்.திருமறைக்கலா மன்றம் வழங்கும் நடன நாடக நிகழ்ச்சிகள் 26 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6-45 மணிக்கு யாழ். பிரதானவீதி மன்றக்கலை அரங்கில் நடைபெறும்.

மன்றத்தின் கவின் கலைகள் பயிலக மாணவர்கள் மேற்படி நிகழ்ச்சிகளைவழங்குவர்.

திருமறைக் கலா மன்றம் நடாத்தும் ''கிராமியக் கலை அரங்கம்'' இம்மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மறைக்கல்வி நிலையமண்டபத்தில் ஆரம்பமாகும்.

மன்ற இயக்குனர் பேராசிரியர் வண நீ மரிய சேவியர் அடிகள் தலைமையில் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, சைவப்புலவர் அநுவை.நாகராஜன் ஆசிரியர் எஸ் எஸ். அமல்ராஜ் ஆகியோர் கிராமியக்கலைகள் பற்றிப் பேசுவர். (21)

## ஜாஎலவில் புதிய மடுமாதா ஆலயம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டம் மடுவிலுள்ள மடுமாதா ஆலயத்திற்கு கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக வழிபடச் செல்ல முடியாதிருந்த தென் பகுதிக் கத்தோலிக்கர்கள் மாற்று ஒழுங்குகளைச் செய்துள்ளார்கள்.

ஜாஎல முத்துராஜ வெலவிலுள்ள சதுப்பு நிலத்தில் புதிய மடுமாதா ஆலயம் உருவாக்கப் பட்டுள்ளது. 1990 -இல் ஓலைக் கொட்டிலில் உருவாக்கப்பட்டுள்ள இச் சிறிய ஆலயம் அதன் வருடாந்த உற்சவத்தை அண்மையில் கொண்டாடியது. தென் பகுதியின் பல பாகங்களிலிருந்தும் திரளாகப் பக்தர்கள் உற்சவத்தில் கலந்து கொண்டார்கள்.

சர்வோதயாவின்

## தொழிற் பயிற்சி நிலையம் தெ. மா. சபைபொறுப்பேற்பு

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சர்வோதயம் அமைப்பினரால் நடத்தப்பட்டு வந்த கங்சிதா தொழில் பயிற்சி நிலையம் தென்மாகாணசபையின் சமூக சேவைப் பகுதியினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

பிரதான தெருவிலிருந்து பதின்மூன்று மைல் தூரத்தில் உள்ளதும், காடுகளால் சூழப்பட்டதுமான பத்து ஏக்கர் நிலப்பரப்பில் இப்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. இந் நிலம் 1982 ஆம் ஆண்டில் அநாதைச் சிறுவர்களின் பராமரிப்புக்கும், அவர்களின் தொழிற் பயிற்சிக்குமென அரசினால் வழங்கப்பட்டிருந்தது.

நொராட் சர்வதேச நிதியத்தினது நிதியுதவியுடன் செயற்படுத்திவந்த இப்பயிற்சி நிலையத்திற்கென திரட்டப்பட்ட வெளிநாட்டு நிதியுதவிகளில் ஊழல் மோசடிகள் நிலவுவதாக அண்மைக்காலமாக புகார் கூறப்பட்டுவந்தது. இந் நிலையம் தற்போது தென் மாகாண சபையின் சமூக சேவைப்பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

## நீதிமன்ற உத்தரவுகளை அரசாங்கம் மதிப்பதில்லை -பெர்ணான்டோ புள்ளே

(கொழும்பு)

அரசாங்கம் நீதிமன்றங்களின் கட்டளைகளை ஏன் மதிப்பதில்லை என்று வெள்ளியன்று பாராளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி எம்.பி ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் பேசுகையில் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களை விசாரணையின் பின் விடுவிக்குமாறு நீதி மன்றம் கட்டளையிட்டால் அரசாங்கம் அவற்றை மதிக்காமல் தடுப்புக் காவல் கட்டளையொன்றின் மூலம் மீண்டும் அவர்களைத் தடுத்து வைக்கின்றது. இது உயர் நீதிமன்றம், மேல் நீதி மன்றம் ஆகியவை விடுக்கும் கட்டளைகளை அரசாங்கம் மதிப்பதில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது எனவும் குறிப்பிட்டார்.

## கொட்டடி, நாவாந்துறையில் இலவச வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் யாழ். கோட்டப் பிரிவினரால் கொட்டடி, நாவாந்துறைப் பகுதி மாணவர்களுக்கான இலவசக் கல்வி வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன. ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு பதினொன்று வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புகள் இன்று பிற்பகல் 3-30 மணிக்குநாவாந்துறைறோ.க. த. க' பாடசாலையில் ஆரம்பமாக உள்ளன.

இதில் சேர்ந்து கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் இன்று பிற்பகல் 3 30 மணிக்கு மேற்படி பாடசாலையில் தொடர்பு கொள்ளும்படி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க யாழ். கோட்ட மகளிர் பொறுப்பாளர் ச. கௌசி கேட்டுள்ளார்.

## மெய்வல்லுநர் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். கனகரத்தினம் மதிய மகா வித்தியாலயம் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 2.00மணிக்கு வித்தியாலய அதிபர் திரு.எம் இராமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ் செயலக புனர்வாழ்வு திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும், திருமதி ப. இந்திரா தேவியும் கலந்து கொள்ளவுள்ளனர். (24)

# தமிழ் இனவாதத்திற்கு எதிராகவே ஹெல உறுமய போராடுகிறதாம்

பிரபாகரனும், தொண்டமானும் வளர்க்கும் இனவாதத்திற்கு எதிராகவே நாம் போராடுகின்றோம் எனவே நாங்கள் இனவாதிகளல்ல என்று சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரும், 'ஹெல உறுமய' குழுவின் முக்கியஸ்தருமான திலக் கருணாரெட்ணா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் குடிமக்கள் அனைவருக்கும் ஒரே நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தாம் போராட்டம் நடத்துவதாக தெரிவித்தார்.

இதேவேளை ஹெல உறுமய சுதந்திரக் கட்சிக்குள் சுதந்திரமான குழுவாகச் செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா கூறியுள்ளார். அண்மையில் கூடிய மத்திய குழுக் கூட்டம் இக்குழுவின் செயற்பாட்டை முடக்குவது பற்றி யோசித்த போதும், கட்சியின் தலைமைப்பீடத்திற்கு எழுந்துள்ள போட்டியில் 'ஹெல உறுமய' பங்குகொள்ளாது எனவும், ஐ.தே.க.வினர் கட்சியைப் பலவீனப்படுத்துவதற்கு 'ஹெல உறுமய' இடமளிக்காது எனவும் உத்தரவாதமளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 'ஹெல உறுமய' தன்னிச்சையாகச் செயற்படும் எனவும் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

## ஜே. வி. பி. தலைவர் உதவியவர் மீது விசாரணை

ஜே. வி. பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க இந்தியாவுக்கு தப்பிச்செல்ல விசாபெற உதவினார் என தனியார் நிறுவன உயரதிகாரி ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர் 1977 இல் ஜே.வி.பி. சார்பாக கொழும்பு மாநகர சபை தேர்தலில் போட்டியிட்டவர் சிலகாலம் ஐ தே. க. விலும் இருந்தவர்

இவர் மீதான விசாரணை ஏப்பிரல் 27 ஆம் திகதி நடைபெறும்.

## சிறிலங்கா - ஐரோப்பிய வர்த்தகத்தில் நெருக்கடி

(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி துறைகளில் எதிர்நோக்கவுள்ள சவால்களை சமாளிப்பதற்கு தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளப் போவதாக சிறிலங்கா வர்த்தக மன்றத்தின் பணிப்பாளர் டி. பி. ஜெயசேகரா தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து தனி ஒரு ஐரோப்பிய சந்தையாக மாற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாலேயே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும்,

ஐரோப்பிய நாடுகளின் சந்தைகளின் மொத்த ஏற்றுமதியில் இலங்கை இருபத்தைந்து சதவீதமான பொருள்களை அனுப்பி வருகின்றபடியால் இத்தகையதொருபொருளாதாரக் கொள்கையைகடைப்பிடிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய சமூகத்துடனானவர்த்தகத்தினால்பத்துக் கோடி அமெரிக்க டொலர் மேலதிக வருமானமாக இலங்கைக்குக் கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஒப்சோபர், ஏரிக்கரை பத்திரிகையிடம்

# 70மில்லியன் மானநஷ்டம் "ஐலண்ட்" கோருகின்றது

(கொழும்பு)

ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்திடமிருந்தும், ஒப்சோபர் பத்திரிகை ஆசிரியர் எச். எல். டி. மகிந்தபாலவிடமிருந்தும் உப்பாலி பத்திரிகை நிறுவனம் ரூபா 70 மில்லியன் நஷ்டஈடு கோரிக் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளது. பெப்ரவரி 6, 1992 இல் டெயிலி ஒப்சோபரிலும், பெப்ரவரி 9,1992 இல் சண்டே - ஒப்சோபரிலும் எழுதப்பட்ட இரு ஆசிரியத் தலையங்கங்களும் உப்பாலி பத்திரிகை நிறுவனத்தை அவமானப்படுத்தும் நோக்குடனேயே எழுதப்பட்டுள்ளதாக அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பத்திரிகைகளிலும் 'ஜனநாயகத்தைப் பரீட்சித்தல்' என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட ஆசிரியத் தலையங்கங்கள் உப்பாலிபத்திரிகை நிறுவனத்திற்கு எதிராகப் பொய்யாகவும், அவதூறாகவும், தீய நோக்கத்துடனும் எழுதப்பட்டவை என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற் பயிற்சி நிலையம் சர்வோ. திடமிருந்து பறிப்பு

(கொழும்பு)

ஹம்பாந்தோட்டையில் இயங்கி வந்த சர்வோதயத்துக்குச் சொந்தமான சுவாஸ்த கைத்தொழில் பயிற்சி நிலையத்தைக் கடந்த புதனன்று சமூக சேவைகள் அமைச்சு கையேற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இந்தப் பயிற்சி நிலையம் 1982 இல் சர்வோதயத்திடமிருந்து யு. என். பி. அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுத் திரும்பவும் சர்வோதயத்திடம் கையளிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது

சர்வோதயத்துக்கு நெருக்கடி ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே சமூக சேவைகள் அமைச்சு கைத்தொழில் பயிற்சி நிலையத்தை சுவீகரித்திருக்கிறது என்று சர்வோதய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச தொடர்புச் சாதனங்கள் மேற்கொண்டு வரும் சர்வோதயத்துக்கு எதிரான பிரசாரத்தினால் தமக்குக் கிடைத்து வந்த வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், சர்வோதயத்துக்கென இறக்குமதி செய்யப்பட்ட அச்சு இயந்திரத்தின் பெறுமதியை தாம் குறைத்து வெளிப்படுத்தியதாகக் கூறி இயந்திரத்தைச் சுங்கப் பகுதியினர் பறிமுதல் செய்து விடடார்கள் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நோநாட் மற்றும் ஊனமுற்றோருக்கான சர்வதேச சுவிடிஸ் நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் இப்பயிற்சி நிலையம் ஆரம்பிககப்பட்டது. சர்வோதயம் இந்தநிலையத்துக்கு மாதம் ஒன்றுக்கு 1,25,000 ரூபா செலவு செய்கிறது. அரசும் பயிலுனர்களுக்கு மாதமொன்றுக்குத் தலா 450 ரூபா வழங்கி வந்தது. இந்நிலையத்தில் ஊனமுற்றவர்களுக்கே கைத்தொழில் பயிற்சி வழங்கப்படுகிறது.

## 'பயங்கரவாதத்தை' ஒடுக்க இஸ்ரேல் உதவி பெறுவோம்

**- சரத்பவார்**

(சென்னை)

'பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட இஸ்ரேல் உட்பட எந்த நாட்டிலிருந்தும் தொழில்நுட்ப உதவி பெற இந்தியா தயங்காது என இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

சென்னை விமானநிலையத்தில் பத்திரிகையாளர் மாநாட்டில் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் இவ்வாறு கூறினார்.

இவர் விமான நிலையத்தில் செய்தியாளர் மாநாட்டை நடத்திக் கொண்டிருந்தபோது விமான நிலையத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக தகவல் வந்தது. இதனால் செய்தியாளர் மாநாடு இடையில் நிறுத்தப்பட்டுவிட்டது.

விமான நிலையத்தை சோதனையிட்ட வெடிகுண்டு நிபுணர்கள் இந்த தகவல் உண்மையானதல்ல என தெரிவித்தனர்.

## திருமலை ராணுவ கெடுபிடி; இன்னல் மத்தியில் தமிழர்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் ஒருவாரகாலமாக இராணுவக் கெடுபிடிகள் மிகவும் அதிகரித்துள்ளன. பல அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் இதனால் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மூதூர் பகுதியிலுள்ள உப்பூறல், றால்குடி பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் அப்பாவி மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களினால் அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து காடுகளில் ஒளித்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோணமலை நகர்ப்பகுதி தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

உவர்மலையில்இருந்த தமிழ் மக்கள்தம்பலகாமத்தில் அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்களில் குடியேறுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளனர். இதனால் மக்கள் சொல்லொணாத்துன்பங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

### 320 ஆயுதப்

தும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் வகுத்த புதிய தந்திரோபாய தாக்குதல் திட்டத்தின்படியே நடந்து வருகின்றன. விடுதலைப் புலிகளின் இப் புதிய தாக்குதல் நடவடிக்கைகள் சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் பெரும குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

கடந்த 24 - 12 - 91 முதல் 23-02-92 வரையான காலப்பகுதியிலேயே 320 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

ஒரு 50 கலிபர் துப்பாக்கி, ஒரு ஜி. பி. எம். ஜி. ரகத் துப்பாககி 18 எல். எம். ஜி. ரகத் துப்பாக்கிகள், 4ஆர். பி. ஜி. ரகத் துப்பாக்கிகள் உட்பட சுமார் 175 இற்கும் மேற்பட்ட நவீன தானியங்கி றைபிள்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கானரவைகள் ஆயுதனவும் ஏனைய இராணுவ தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இக்காலப் பகுதியில் கொல்லப்பட்ட பாதுகாப்புப் படையினரதும்கைப்பற்றப்பட்ட ஆயுத, தளபாடங்கள் பற்றிய நிரற்படுத்தப்பட்ட விபரங்கள் மூன்றாம் பக்கத்தில் உள்ளன. (க)

### வவுனியா

கொண்டன.

செட்டிகுளம், பேயாடி கூளாங்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து எறிகணைத் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

இதேவேளை நெலுக்குளம், செட்டிகுளம் பகுதிகளில் மேலும் சிறிலங்காப் படையினர் குவிக்கப்பட்டு வருவதாகவும் மன்னார் - வவுனியா வீதியில் முன்னேறுவதற்காக இந்த படைக்குவிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் மன்னார் மாந்தைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கடும் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டு வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு, மணலாறு பகுதி இராணுவ முகாம்களிலிருந்தும் நேற்றுப் பகல் கடும் எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன

### புலிகள்

அரசிடம் எடுத்துரைக்கப் போவதாகவும் கூறினார்.

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை தொடர்பாகத் தனக்கும் பிரதமருக்கும் அபிப்பிராய பேதம் நிலவுவதாக வெளிவந்த செய்தியை அவர் மறுத்தார்.

### மூன்று

ஊர்வலம் நண்பகல் 12 30 மணியளவில் யாழ். செயலகத்தை அடைந்தது. உணவு முத்திரையில் புள்ளிகள் வெட்டி எடுக்கப்பட்டதைக் கண்டிக்கும்மகஜர்ஒன்று யாழ். மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. மகஜரைப் பெற்றுக்கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகநாதன் மேற்படி விடயம் தொடர்பாக கூறப்படும் குற்றச்சாட்டு தவறானது என்றும் இது தொடர்பான பூரண விளக்கங்கள் அடங்கிய பிரசுரமொன்று விரைவில் வெளியிடப்பட இருப்பதாகவும் கூறினார். (க)

## 3 வருடங்கள்பரீட்சைஇல்லை புதியஅனுமதியைநிறுத்துக

**- தொழில்நுட்ப மாணவர்**

கடந்த மூன்று வருடங்களாக நடாத்தப்படாத தொழில் நுட்பக்கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சைகள் நடைபெறும் வரை புதிய மாணவர்களை அனுமதிப்பதை நிறுத்துமாறு கோரி தொழில் நுட்பக்கல்லூரியின் மாணவர் அவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மாணவர் அவையினால் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் 1989, 90, 91 ஆம் ஆண்டுகளுக்கான இறுதியாண்டுப் பரீட்சைகள் இதுவரை நடாத்தப்படவில்லை. இவற்றுக்குப் பதிலாக விசேடபரீட்சையை நடத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையையும் நிராகரித்த உயர் கல்வி அமைச்சு 1991 ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றுமாறு அறிவித்திருந்தது. ஆனால் இப்பரீட்சையும் இங்கு நடாத்தப் படாததனால் கல்வி நெறியை முடித்த பல மாணவர்கள் சான்றிதழ் பெறமுடியாது விரக்தியடைந்த நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் தொடர்ந்தும் எதிர்பார்ப்புடன் வருகின்ற மாணவர்கள் விரக்தியுடன் கல்லூரியை விட்டுவிலகுகின்ற நிலை தொடராது இருக்கும் முகமாக மாணவர் அவை பின்வரும் இரு தீர்மானங்களை முன்வைத்து பரீட்சை தொடர்பான தனது போராட்டத்தை தொடர்கிறது.

புதியமாணவர் அனுமதியை பரீட்சைத் திகதியை அரசு அறிவிக்கும் வரை நிறுத்துமாறும் இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டு மாணவர்களுக்கான கற்கை நெறிகளை ஆரம்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது இவ்விரு கோரிக்கைகளையும் நிறைவேற்றக் கோருகிறோம் என அவ் வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச,க)

## ஆர்ப்பாட்டம்

மாஸ்கோவில் ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகளும் தேசியவாதிகளும் மேற்கொண்ட ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர். முன்னாள் இராணுவ வீரர்களும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஆயுதப் படையினர் தினத்தை நினைவு கூரும் முகமாக நடந்த இப் பேரணி கிளம்கிரெம்ளினை அடுத்த சதுக்கத்தை நோக்கி ''ஜெல்சின் கொடுங்கோலன்'' என்ற கோஷத்துடன் முன்னேறியது

கம்யூனிஸ்டுக்கள் செங்கொடியையும், தேசியவாதிகள் பழைய அரச பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.